## யாருடைய ஆணைக்கு கட்டுப்பட்டு செயல்படுகிறார்?

# ஆளுநர் ரவி முழுநேர அரசியல்வாதிபோல் பேசுகிறார்!

### ‘நியூஸ் 18’ தொலைக்காட்சி ‘சொல்லதிகாரம்’ நிகழ்ச்சியில் மூத்த பத்திரிகையாளர் ஜென் ராம் விவாதம்!

**சென்னை, ஜுன் 8**

**‘நியூஸ் 18’ தொலைக்காட்சியில் ‘சொல்லதிகாரம்’ நிகழ்ச்சியில் முதல்வரின் முதலீடு ஈர்ப்புப் பயணம் ஆளுநரின் விமர்சனம் அக்கறையா? அத்துமீறலா என்ற தலைப்பில் விவாதிக்கப்பட்டது.**

**இந்த விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் ஜென்ராம் பங்கேற்று பேசுகையில் ஆளுநர் யாருடைய ஆணைக்கு கட்டுப்பட்டு செயல்படுகிறார் என்றும் ஆளுநர் முழுநேர அரசியல்வாதிபோல் செயல்படுகிறார் - பேசுகிறார் என்றும் குற்றம் சாட்டினார்.**

‘நியூஸ் 18’ தொலைக்காட்சியில் ‘சொல்லதிகாரம்’ நிகழ்ச்சியில் “முதல்வரின் முதலீடு ஈர்ப்புப் பயணம், ஆளுநரின் விமர்சனம் அக்கறையா? அத்துமீறலா...?” என்ற தலைப்பில் நடைபெற்ற விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் ஜென் ராம் பங்கேற்று பேசியதாவது:-

**நெறியாளர் கார்த்திகைச்செல்வன்:** முதல்வரின் முதலீடு ஈர்ப்புப் பயணம், ஆளுநரின் விமர்சனம் குறித்து உங்கள் பார்வை என்ன?

**மூத்த பத்திரிகையாளர் ஜென்ராம்:** ஐ.ஐ.டி. ஐ.ஐ.எம். யாரால் உருவாக்கப்பட்டது என்பதை சேர்த்து சொன்னார்கள் என்றால் அவர்களுடைய அரசியல் நிலைப்பாட்டை, அவர்கள் சரி செய்து கொள்வதற்கு உதவும். அதில் பெயரைச் சொல்ல மாட்டார்கள், தமிழ்நாட்டில் ஆரம்பப் பள்ளிகளை தொடங்கியது யார்? என்றால் அதிலேயும் கட்சி பெயர் சொல்ல மாட்டார்கள். அதிலும் ‘காமராஜர்’ என்று காமராஜர் பெயரை மட்டும் சொல்வார்கள், அங்கே, அவர்கள் நேரு என்கிற பெயரைச் சொல்லமாட்டார்கள், இரண்டு இடங்களிலும் கட்சிப் பெயரை சொல்லமாட்டார்கள். அவர்களுடைய வாதங்களின் தன்மையே வேறு.

**தமிழ்நாட்டு ஆளுநர் முழுநேர அரசியல்வாதிபோல் செயல்படுகிறார்!**

ஆளுநரைப் பற்றி சொல்லவேண்டுமேயானால், அவர் ஒரு முழு நேர அரசியல் வாதியைப் போல பேசிக்கொண்டிருக்கிறார். தொடர்ந்து பேசிக் கொண்டு வருகிறார். சில; பல மாதங்களாக இப்படி பேசிக் கொண்டிருக்கிறார். “நாம் பேசுவதாலோ, சந்திப்பதாலோ முதலீடுகள் வருவதில்லை,” என்று ஆளுநர் சொன்ன சொல், எந்தக் காலக்கட்டத்தில் பேசி இருக்கிறார் என்பது மிகவும் முக்கியமானது.

ஜப்பானுக்கும், சிங்கப்பூருக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் போயிட்டு, சென்னை வந்த ஒரு வார காலத்திற்குள், இந்தக் கருத்தை ஆளுநர் சொல்கிறார். அவர் மனதில் முதலமைச்சர் ஸ்டாலின் மீது இருக்கக் கூடிய கோபம், எரிச்சல், வெறுப்பு என்று ஏதோ ஒரு சொல் - அந்தச் சொல் தான் அவரது இந்த வார்த்தைகளில் வந்து விழுகிறது.

தமிழ்நாட்டில் திறன் குறைந்த ஊழியர்கள் இருக்கிறார்கள் என்று சொல்வதற்கு பின்னால் இருக்கின்ற செய்தி என்ன? இங்கே உலக மாநாட்டிற்காக தமிழ்நாடு முதலமைச்சர் முயற்சி எடுத்து இருக்கிறார், ஒரு மாநாடு நடத்தப் போகிறார், அதற்கு முன்பு அதிலே கலந்து கொள்ளுங்கள் என்று ஜப்பானிலும், சிங்கப்பூரிலும் அழைப்பு விடுத்து வந்திருக்கிறார்.

இப்படி ஒரு சூழலில்தான் ஆளுநர் இங்கு திறன் குறைவு, இங்கே இருக்கக் கூடிய மாணவர்களுக்கு




ஜென் ராம்    கார்த்திகைச்செல்வன்

ஆங்கிலத் திறமை இல்லை, அவர்கள் மனத்தடையோடு இருக்கிறார்கள் என்கிற மாதிரி ஒரு எதிர்மறைக் கருத்துக்களை விதைக்க வேண்டிய காரணம் என்ன? இங்கே, வராதீர்கள் உங்களுக்கு வேண்டிய சூழல் இங்கே கிடைக்காது, அப்படி என்று, முதலமைச்சர் எடுத்த முயற்சிக்கு நேர் எதிரானதொரு நிலைப்பாட்டை எடுத்து; வருகின்ற முதலீட்டையும் தடுப்பதற்கான ஒரு முயற்சியில் ஆளுநர் ஈடுபடுகிறாரோ என்று நான் ஐயுறுகிறேன்.

**நெறியாளர்:** அவருக்கு அதனால் என்ன இலாபம்?

**ஆளுநரின் செயல் ஒவ்வொன்றும் அரசின் செயல்பாட்டை முடக்குகிறது!**

**ஜென் ராம்:** அது தெரியவில்லை, அவர் கடந்த காலங்களில் செய்து கொண்டிருந்த எல்லா விஷயங்களையும் பார்த்தால், அரசை செயல்படவிடாமல் முடக்கும் விதமாக, மசோதாக்களில் கையெழுத்துப் போடாமல் வைத்து இருந்தது, அதனை என்ன காரணத்திற்காக வைத்திருந்தார்? அதில் அவருக்கு என்ன இலாபம்? என்று பார்த்தோமா? அவருடைய செயல் ஒவ்வொன்றும் இந்த அரசை செயல்பட விடாமல் முடக்குகிறது என்பதுதான் உண்மை. அதில் என்ன இலாபம் அவருக்கு இருக்கு? அவர் யாருடைய ஆணைக்கு கட்டுப்பட்டு செயல்படுகிறார்? ஆனால், அப்படி செயல்படுகிறாரா? இல்லையா; என்பது ஒவ்வொருவருடைய அனுமானத்திற்கும் அதனை, நான் விட்டு விடுகிறேன்.

அவர் பேசுவது எதுவுமே தரவுகளோடு பேசுவதில்லை. இன்றைக்கு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு சொல்கிறார், நிதி ஆயோக் செல்லக் கூடிய தரவுகளாக இருந்தாலும் சரி, ஒன்றிய அரசு என்.ஐ.பி. ஆர். தரவுகளாக இருந்தாலும் சரி, எல்லாவற்றிலும் கல்வியில் 100இல் இங்கே எத்தனையாவது தரவுகளில் தமிழ்நாடு இருக்கிறது என்பதை அவர்களுடைய (ஒன்றிய அரசு) தரவுகளிலே சொல்றார்கள், ஆனால் இவர் பேசுவதில் தரவுகள் எதுவும் இல்லை. சொல்லக் கூடியவைகள் பொய்யாக இருக்கின்றன.

**நெறியாளர்:** தேசிய சராசரியைவிட கிட்டத்தட்ட இரண்டு மடங்கு வந்திருக்கிறோம். அது இன்றைய தேவையை பூர்த்தி செய்வதாக இருக்கிறதா?

**ஜென்ராம்:** தேசிய சராசரியைவிட இரண்டு மடங்கு நமக்கு இருக்கிறது. ஏனென்றால் இந்தத் தரவை ஆளுநரால் மறுக்க முடியாது. அதனை அவர் ஏற்றுக் கொள்கிறார். ஆனால் எங்கே; எந்த மாநிலத்தைவிட இது ரொம்ப பின்னால் இருக்கிறது, மகாராஷ்டிரா, குஜராத் அதற்குப் பிறகு, இங்கே நான்காவது, ஐந்தாவது இடத்தில் இதனைச் சொல்வார்கள், இயல்பாகவே அந்தப் பகுதியில் இருக்கக் கூடிய பிற காரணிகள் அதற்குள்ளே நிறைய இருக்கு.

**ரெக்ரூட் ஏஜென்சி நடத்துகிறாரா ஆளுநர்?**

இந்தத் தொழில் தொடர்பான விஷயங்கள் மட்டு மில்லை, தொழில் தொடங்குவதற்கு உகந்த சூழல் இல்லை. தொழில் நிறுவனங்களுக்கு இங்கே தகுதியான லேபர் கிடைக்கமாட்டார்கள் அப்படி என்று ஆளுநர் சொல்வதின் மூலமாக அவர் என்ன ரெக்ரூட் ஏஜென்சி நடத்துகிறாரா,

இந்த மாநிலத்தில் உள்ள மாணவர்கள் எதை கற்க வேண்டும்? எப்படி அவர்கள் வளர வேண்டும்? ஒரு முழுமை பெற்ற மனிதனாக, சமூக நீதி பற்றி தெரிந்து கொண்டு, சக உயிர்களை நேசிக்கக் கூடிய மனிதர்களாக வளரக் கூடிய கல்வியை இந்த மாநிலம் கொடுக்கும். அதற்கான முன்னுரிமையை தீர்மானிக்க வேண்டியது மாநிலம். அதனை விட்டுவிட்டு எதைப் பற்றியும் கவலைப்படாமல் புத்தகத்தில் இருப்பதை அப்படியே படித்து வெளியே வரக்கூடியவர்களை நிறுவனங்களுக்கு வேலை செய்யக் கூடிய ஒரு இன்ஜினியர்ஸை தயார் செய்து கொடுக்க வேண்டியது மட்டுமே உங்களுடைய பணி, பல்கலைக் கழகங்களுடைய வேலை என்று சொல்வதற்கு இவர் யார்?

இந்த மாநிலத்தில் பல்கலைக் கழகங்கள் எப்படி செயல்பட வேண்டும்? என்று தீர்மானிப்பதற்கு இந்த மாநிலத்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இருக்கு. அதிலே ஒரு முதலமைச்சர் இருக்கிறார்.

**நெறியாளர்:** பல்கலைக் கழகத்தின் வேந்தர், துணை வேந்தர்கள் மாநாட்டில் பேசியிருக்கிற்ரே.

**ஜென்ராம்:** வேந்தர் என்றால் என்ன வேலை? இதை தீர்மானிக்கின்ற பொறுப்பு அவருக்கு இருக்கா? அமைச்சரவைக்கு என்ன வேலை? துறை அமைச்சருக்கு என்ன வேலை? துணை வேந்தர்களுடைய ரோல் என்ன? வேந்தர் என்றால் எல்லா விஷயத்திலும் தலையிடுவாரா? வேந்தர் என்கிற முறையில் இது மாதிரி விஷயங்களுக்கெல்லாம் பொறுப்பேற்பவர்கள், ஒரு பல்கலைக் கழகத்தில் ஒரு அநீதி நடந்து விட்டது என்றால் ரூமுக்குள் போய் கதவினை பூட்டிக் கொள்கிறார்களே அது எப்படி? ஒரு விபத்து நடந்துவிட்டது என்றால், ஒரு தற்கொலை நடந்து விட்டது என்றால், என்றைக்காவது வந்து, நான் தான் வேந்தர் நான் கருத்து சொல்கிறேன் என்று வெளியே வந்து இருக்கிறார்களா? அவையெல்லாம் அரசு பொறுப்புக்குப்போய் விடுகிறது, இவர்களுக்கு அந்தப் பொறுப்பே இல்லாமல் போகிறது.

**முன்னுக்குப் பின் முரணாகப் பேசும் ஆளுநர்!**

மாநிலங்களுடைய வளர்ச்சியைவிட ஒன்றிய அரசின் வளர்ச்சிதான் முக்கியம் என்றும் கடந்த காலத்தில் பேசினார், முன்னுக்குப் பின் முரணாகப் பேசிக் கொண்டு இருப்பதே அவருடைய அன்றாடப் பணிகளாக இருக்கிறது. நேற்றைக்கு ஒரு பேச்சு, அந்தப் பேச்சு நேர் எதிரான பேச்சை இன்றைக்கு பேசுகிறார். மாநிலங்களுடைய வளர்ச்சியே தேவை யில்லை, அதனைவிட ஒன்றிய அரசின் வளர்ச்சிதான் முக்கியம், என்கிறார். ஒன்றிய அரசுக்கு என்ன தனியாக பிரதேசம் இருக்கிறதா? மாநிலங்கள் சேர்ந்தது தானே ஒன்றியம். அதனை விட்டு விட்டு, இன்றைக்கு வந்து அந்த மாநிலம் சிறப்பா இருக்கு, இந்த மாநிலம் சிறப்பா இருக்கு, மாநிலங்களைப் பற்றி பேசக் கூடிய சூழல் ஏன் வருகிறது? அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் இவையெல்லாம் தமிழில் வேண்டும் என்று சொல்கிறார். சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன் கேட்டமாதிரி தமிழ் மொழி உள்பட எட்டாவது அட்டவணையில் உள்ள அனைத்து மொழிகளையும் ஆட்சி மொழியாக கொண்டு வாருங்கள், மாநிலங்கள் ஆட்டாமெட்டிக்கா உற்சாகம் பெற்று, ஊக்கம் பெற்று அனைத்து விஷயங்களையும் இங்கே தமிழில், தாய்மொழியில் கொண்டு வருவார்கள்.

ஆங்கிலம் சரளமாக பேச முடியவில்லை, மனத்தடை இருக்கு. அப்படி என்று யார் சொல்வது? பாரதியம் தொலைத்து காலனி ஆதிக்கத்தில் இருக்கிறோம் என்று ஆங்கிலேயர்களுடைய உடையை தரித்துக் கொண்டு, ஆங்கிலத்தை நிந்தித்த ஆளுநர் இப்போது, இங்கே இந்த மாதிரி பேசுகிறார் என்றால் இதனை என்னவென்று சொல்வது.

எல்லா இடங்களிலும் தாய் மொழிக் கல்வி என்றால், அதனுடைய இன்னொரு விளைவு என்ன? தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய மாணவர்கள் தமிழ் நாட்டில் படிக்கிறவர்கள், அதனை தாண்டி வேறு இடங்களில் ஆங்கில வழி கல்வி இருப்பதினால் படிக்கிறார்கள், அதற்கு ஒரு பெரிய கட்டையைப் போடும் விதமாக, அவர்கள் ஒரு கொள்கையைக் கொண்டு வருகிறார்கள். அதனை இங்கே பேசும் போது தமிழ் மொழியில் கல்வி என்று சொல்கிறார்கள்,

வெளியில் அவர்கள் வந்து ஆங்கிலக் கல்வியைத் தூக்குவதற்காக எடுக்கக் கூடிய முயற்சியை அவர்கள் மூடி மறைக்கிறார்கள். இவை அனைத்தும் உள்ளடக்கியதுதான் அவருடைய பேச்சு. ஆளுநருடைய பேச்சு முழுக்க முழுக்க ஒரு அரசியல் பேச்சு. முழுக்க முழுக்க நிறுவனங்களுடைய லாபத்துக்கு துணை போகின்ற பேச்சு. எல்லா இடங்களிலும் பிரச்சினை வந்தவுடனே லேபரை குறை சொல்வது, திறமை இல்லாத தொழிலாளர்கள், திறமை இல்லாத ஊழியர்கள் என்று சொல்வது, அவர்களுடைய பழக்கம். அந்தப் பழக்கத்தைதான் ஆளுநர் இங்கே முன் வைத்திருக்கிறார்.

இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் ஜென் ராம் வாதத்தில் பங்கேற்றுப் பேசினார்.

---

சிறைச்சாலை காவல்துறை தலைவர் அமலேஷ் பூஜாரி முன்னிலையில்

# தமிழ்நாடு சிறைவாசிகளுக்கு தரமான உணவு!

## அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்து வழங்கினார்!

*சென்னை, ஜுன் 8-*

*தமிழ்நாடு சிறைகளில் கைதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த கஞ்சி மாற்றப்பட்டு, இனி சூடாக இட்லி, பொங்கல், உப்புமா, லெமன் சாதம் தக்காளி சாதம் ஆகியவை வழங்கப்படும். வாரம் 2 நாள் முட்டையும், கோழி கறியும் வழங்கப்படும். இப்புதிய திட்டத்தை அமைச்சர் எஸ்.ரகுபதி, புழல் சிறையில் திங்கள் கிழமை தொடங்கி வைத்தார்.*

*தமிழ்நாடு சட்டம் மற்றும் சிறைத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, கடந்த தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத் தொடரில் சிறைத் துறை மானிய கோரிக்கையின்போது கைதிகளின் நலனுக்காக நிபுணர் குழுவின் அறிக்கையின்படி உணவு முறை மாற்றம் செய்யப்படும் என அறிவித்தார்.*

*இந்த அறிவிப்பின் படி, சிறைகளில் கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு முறை மாற்றப்பட்டது. முக்கியமாக பி வகுப்பு கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு முறையில் பெரும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஏ வகுப்பு கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு முறையில் சிறிய அளவில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே ஏ வகுப்பு கைதிகளுக்கு தரமான உணவே வழங்கப்பட்டு வருகிறது.*

*உணவு முறை மாற்றத்தின்படி, பி வகுப்பு கைதிகளுக்கு வாரத்தில் புதன், வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் வழங்கப்பட்டு வந்த கஞ்சி ஒழிக்கப்பட்டது. இதற்கு பதிலாக புதன் கிழமை தக்காளி சாதம், முட்டை, தேங்காய் சட்னியும், வெள்ளிக்கிழமை இட்லி, சாம்பாரும், ஞாயிற்றுக்கிழமை கோதுமை உப்புமா, தேங்காய் மற்றும் வேர்க்கடலை சட்னியும் வழங்கப்படுகிறது.*

*இதேபோல கைதிகளுக்கு காலை பொங்கல், சாம்பார், இட்லி, தக்காளி சாதம், லெமன் சாதம், புதினா சாதம் ஆகியவை வழங்கப்படுகிறது. இதில் பி வகுப்பு கைதிகளுக்கு முதல் முறையாக இப்போதுதான் இட்லி, தக்காளி சாதம், லெமன் சாதம், புதினா சாதம் ஆகியவைவழங்கப்படுகிறது. அதேபோலகாலையில் வழங்கப்பட்டு வந்த தேநீர், இனி மாலையிலும் சுண்டலுடன் வழங்கப்படுகிறது. மேலும் புதன், சனிக் கிழமைகளில் காலை உணவுடன் கோழி முட்டை வழங்கப்பட உள்ளது. ஞாயிற்றுக்கிழமை மட்டும் நண்பகல் சாப்பாட்டுடன் வழங்கப்பட்டு வந்த கோழிகறி, இனி புதன்கிழமையும் வழங்கப்படுகிறது. மேலும் நண்பகல் சாப்பாட்டில் இது வரை வழங்கப்படாமல் இருந்த கீரை பொரியல், தயிர் சாதம், கார குழம்பு காய்கறி அவியல், தயிர் ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன யில்*

*இரவு உணவிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதில் செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை இரவு சப்பாத்தி, சாதம், சாம் பார், கொண்டை கடலை குருமா ஆகியவை வழங்கப்படுகிறது. உணவு முறையில் செய்யப்பட்ட இந்த மாற்றத்தின் விளைவாக தமிழக சிறையில் உள்ள ஏ வகுப்பு கைதிகளுக்கு ஒரு நாளைக்கு ரூ.207.89, பி வகுப்பு கைதிகளுக்கு ரூ.135.26 அரசு செலவிடுகிறது.*

*பழைய முறையில் ஏ வகுப்பு கைதிகளுக்கு ரூ. 146.44, பி வகுப்பு கைதிகளுக்கு ரூ.96.38அரசு செலவிட்டது குறிப்பிடத்தக்கது.*

*தொடக்க விழா: முன்னாள் முதல்வர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, இத் திட்டத்தை தொடங்கிவைக்கும் விழா புழல் மத்திய சிறை வளாகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. இந்தவிழாவுக்கு சிறைத்துறை டிஜிபி அம்ரேஷ் பூஜாரி தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக அமைச்சர் எஸ். ரகுபதி, கைதிகளுக்கு உணவை பரிமாறி புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார்.*



சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில் நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் மேற்கொண்டார். இதில் மாவட்ட ஆட்சியர், அரசு துறை அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

# மணிப்பூரில் கலவரம் நீடிப்பு!

## 3 பேர் உயிரோடு எரிப்பு!

*இம்பால், ஜுன் 8 -*

*மணிப்பூரில் பெரும்பான்மையாக உள்ள மைதேயி சமூகத்தினர் தங்களுக்கு பழங்குடியின அந்தஸ்து வழங்க வேண்டும் என்று கோரி வருகிறார்கள்.*

*இதற்கு நாகர் மற்றும் குகி சமூகத்தார் அடங்கிய சிறுபான்மை பழங்குடியின சமூகத்தினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள்.*

*இது தொடர்பாக மணிப்பூரின் பல்வேறு மாவட்டங்களில் மைதேயி மற்றும் பழங்குடிகளுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. கடந்த மாதம் 3ந் தேதி முதல் கலவரம் ஏற்பட்டது. கலவரத்தில் 100க்கும் மேற்பட்டோர் பலியானார்கள். 310 பேர் காயம் அடைந்தனர்.*

*அங்கு மீண்டும் இயல்பு நிலை திரும்ப ராணுவம் மற்றும் துணை ராணுவ படை வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். மணிப்பூரில் அமைதியை ஏற்படுத்தும் வகையில் உள்துறை மந்திரி அமித் ஷா அங்கு சென்றார். ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் நீதி விசாரணை நடத்தப்படும் என்று அவர் அறிவித்தார்.*

---

# நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு!



நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாளை (9.6.2023 வெள்ளிக்கிழமை) பகல் 12 மணி அளவில் மாவட்ட கழக அவை தலைவர் கே.போஜன் தலைமையில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் முன்னிலையில் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு- பொதுக்குழு உறுப்பினர்கள், நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

**பொருள்:** 1. தலைமை கழக அறிவிப்பின்படி, நீலகிரி மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடர் நிகழ்ச்சிகள் சிறப்புடன் நடத்துவது குறித்து. 2. புதிய உறுப்பினர் சேர்ப்பு பணிகள் துரித படுத்தி, நிறைவு செய்வது குறித்து.

3. கழக ஆக்க பணிகள்.

**பா.மு.முபாரக்**

*செயலாளர் - நீலகிரி மாவட்ட தி.மு.க.*